# COVID-19 What is a Close contact?

NSW GOVERNMENT

Tamil

## ‘நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர்’ என்றால் என்ன?

‘கோவிட்-19’ தொற்று உள்ள ஒருவருடன் நெருங்கிய தொடர்பில் இருந்ததனால் ‘கோவிட்-19’ வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கக் கூடும் என்று கருதப்படும் நபர் ஒருவர் ‘நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர்’ எனப்படுவார்.

‘NSW சுகாதாரம்’ உங்களுடன் தொடர்புகொண்டாலோ அல்லது நெருங்கிய தொடர்பு ஏற்பட்டிருக்கக்கூடிய தலம் ஒன்றிற்கு நீங்கள் சென்றிருந்தாலோ நீங்கள் ஒரு ‘நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர்’ என்று நீங்கள் தெரிந்துகொள்ளலாம்.

www.nsw.gov.au/COVID-19 எனும் நியூ சவுத் வேல்ஸ் மாநில அரசாங்க வலைத்தலத்தில் இந்தத் தலங்கள் யாவை என்பதை நீங்கள் காணலாம்.

நீங்கள் ஒரு ‘நெருங்கிய தொடர்பில் இருந்திருப்பவர்’ என்றால், (உங்களுக்கு நோயறிகுறிகள் இல்லை என்றாலும், அல்லது உங்களுக்கு உடல்நலம் நன்றாக இருப்பது போலவே இருந்தாலும் கூட) நீங்கள் உடனடியாக நோயறிவுச் சோதனையை மேற்கொண்டாக வேண்டும், மற்றும் உங்களுக்கு நோய்த்தொற்று இல்லை என்ற முடிவை நீங்கள் பெற்றாலும் கூட 14 நாட்களுக்கு நீங்கள் உங்களைக் கட்டாயமாகத் தனிமைப்படுத்திக்கொள்ள வேண்டும்.

7 மற்றும் 12 ஆம் நாட்களிலும் மீண்டும் நோயறிவுச் சோதனைகளை மேற்கொள்ளுங்கள். உங்களுக்கு நோய்த்தொற்று இல்லை என்ற முடிவை நீங்கள் பெற்றாலும் கூட முழு 14 நாட்களுக்கும் நீங்கள் தனிமையில் இருந்தாக வேண்டும்.

பின்வருவோரை (‘நெருங்கிய தொடர்பில் இருந்திருக்கும் இரண்டாம்-நிலையவர்கள்’) நோயறிவுச் சோதனைகளை மேற்கொள்ளுமாறும், அவர்களுக்கு நோய்த்தொற்று இல்லை என்ற முடிவை அவர்கள் பெறும் வரைத் தனிமையில் இருக்குமாறும் நீங்கள் அவர்களைக் கட்டாயமாகக் கேட்டுக்கொள்ள வேண்டும்:

- உங்களுடைய வீட்டில் உங்களுடன் வசிப்பவர்கள்
- ‘கோவிட்-19’ -ஐ நீங்கள் எதிர்கொண்ட பிறகு உங்களுடைய வீட்டிற்கு வந்திருப்பவர்கள்
- ‘கோவிட்-19’ -ஐ நீங்கள் எதிர்கொண்ட பிறகு நீங்கள் யாருடைய வீடிற்குச் சென்றிருக்கிறீர்களோ அவர்கள்
- ‘கோவிட்-19’ -ஐ நீங்கள் எதிர்கொண்ட பிறகு, வாகனம் ஒன்றின் உட்புறம் போன்ற குறுகலான இடத்தில் உங்களுடன் இருந்திருக்கும் நண்பர்கள்